டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 8.09.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 068 - Madurai | Online Edition

# தில்லி தேசிய விலங்கியல் பூங்காவில் ஞாயிறு தோறும் பறவை, வண்ணத்துப்பூச்சி, தட்டான் நடைப்பயணங்கள்

புது தில்லி, செப்.7

பறவைகள், பட்டாம்பூச்சிகள், தட்டான்கள் ஆகியவற்றை ஆவணப்படுத்துதல், வனவிலங்கு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் தொடர் முயற்சிகளின் ஒரு பகுதியாக, புதுதில்லியில் உள்ள தேசிய விலங்கியல் பூங்கா, மூன்றாவது பட்டாம்பூச்சி, தட்டான் நடைப்பயணத்தையும், 13-வது பறவைகள் நடைப்பயணத்தையும் இன்று (06.09.26) நடத்தியது. பட்டாம்பூச்சி, தட்டான் நிபுணர்களான சஞ்சய் திவாரி, சி பி மௌரியா ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழும், தன்னார் வலர்களின் உதவியுடனும் இந்த நடைப்பயணங்கள் நேற்று காலை 6:45 மணி முதல் 10:30 மணி வரை நடத்தப்பட்டன.

இந்த நிகழ்ச்சிக்கு பறவை, வண்ணத்துப்பூச்சி ஆர்வலர்கள், இயற்கை விரும்பிகள், மாணவர்கள், வனவிலங்கு புகைப்படக் கலைஞர்கள், பல்லுயிர் பாதுகாப்பில் ஆர்வமுள்ளோர் ஆகியோரிடமிருந்து உற்சாகமான வரவேற்பு கிடைத்தது. இந்த நடைப்பயணங்களில் மொத்தம் 16 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் தேசிய விலங்கியல் பூங்காவின் இயக்குநர், விலங்கியல் பூங்கா அதிகாரிகள் கலந்து கொண்டு, பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டி அவர்களுடன் கலந்துரை யாடினர். இந்த நடைப்பயணங்களின் போது, பங்கேற்பாளர்கள் 700-க்கும் மேற்பட்ட பறவைகளைக் கவனித்து, 44 பறவை இனங்களையும், அத்துடன் நடைப்பயணப் பகுதியில் தலா 4 வண்ணத்துப்பூச்சி இனங்கள், ஒரு தட்டான், ஒரு ஊசித் தட்டான் இனத்தையும் ஆவணப்படுத்தினர்.

பறவைகள் நடைப் பயணத்தின் ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாக, 300-க்கும் மேற்பட்ட வண்ண நாரைகள் காணப்பட்டன.

பங்கேற்பாளர்களிடையே உரையாற்றிய தேசிய விலங்கியல் பூங்காவின் இயக்குநர் டாக்டர் சஞ்சீத் குமார், இதுபோன்ற இயற்கை நடைப்பயணங்கள், களத்தில் உயிரினங்களை அடையாளம் காணும் திறன்களை வலுப்படுத்தவும், புரிதலை மேம்படுத்தவும், பல்லுயிர் ஆவணப்படுத்தலுக்குப் பங்களிக்கவும் வாய்ப்புகளை வழங்குகின்றன என்று எடுத்துரைத்தார்.

அடுத்த இயற்கை நடைப்பயணங்கள் 20.09.26, ஞாயிற்றுக் கிழமை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# இலவச கால்நடை மருத்துவ முகாம்



மதுரை, செப்.7

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் நடைபெற்று வரும் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாமின் ஒரு பகுதியாக, அரும்பனூர் புதூரில் கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. ஒத்தக்கடை கால்நடை மருத்துவமனை மருத்துவர் சகானா தலைமையில் நடைபெற்ற இம்முகாமில், கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல், சினை பரிசோதனை, நோயுற்ற ஆடு, மாடுகளுக்கு சிகிச்சை, குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம் மற்றும் வெறிநாய் தடுப்பூசி உள்ளிட்ட பல்வேறு மருத்துவப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், கோழிகளுக்கு யூம்ாலு தடுப்பூசியும் செலுத்தப்பட்டது. 250க்கும் மேற்பட்ட மாடுகள், ஆடுகள், பூனை, நாய்கள் மற்றும் கோழிகள் பயணடைந்தன.

முகாமிற்கான ஏற்பாடுகளை வேளாண்மைக் கல்லூரி மற்றும் சமுதாய அறிவியல் கல்லூரிகளின் 2024-ம் ஆண்டு நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் சித்ரா, முனைவர் ஆரோக்கிய மேரி, முனைவர் வேணுதேவன் ஆகியோர் செய்திருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில்

# காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி

திருச்சி, செப்.7

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக வருகின்ற 10.09.26 அன்று (வியாழன்கிழமை) காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் கட்டணப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் சிப்பி காளான் வளர்க்கும் முறைகள், நிர்வாகம், வணிக காளான் வளர்ப்பு, செயல் விளக்கம், காளான் வளர்ப்பில் அனுபவம் வாய்ந்ததொழில் முனைவோர்களின் சொற்பொழிவு, சந்தை தகவல், காளானில் மதிப்புகூட்டப்பட்ட பொருட்களின் தயாரிப்பு முறைகள் போன்றவை எடுத்துரைக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று காலை 9 மணிக்கு வந்து பயிற்சி கட்டணம் ரூபாய் 590/- நேரிடையாக செலுத்த வேண்டும். முன்பதிவு அவசியம்.

பயிற்சி நேரம் : காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை.

தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் முன்பதிவு செய்து கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் விபரங்களுக்கு தொலைபேசி எண் : 0431-2962854, 90421 21672, 99443 98239, என்ற எண்களை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**33. சிக்கன் மஞ்சோ சூப்**

**தேவையான பொருட்கள்**

சிக்கன் — 150 கிராம்

நூடுல்ஸ் — ½ கப்

பூண்டு — 4 பல்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

சிக்கனை வேக வைத்து நூடுல்ஸ் சேர்த்து சமைக்கவும். மிளகு தூள் சேர்த்து சூடாக பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# விவசாயிகள் வெளி மாநில அளவிலான கண்டுணர்வு சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர்




திருச்சி, செப்.7

திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி வட்டாரம் வேளாண்மை துறை அட்மா திட்டத்தில் வெளி மாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா 02.09.26 முதல் 06.09.26 வரை கர்நாடகா மாநிலம் பெங்களூர் உள்ள ஸ்ரீ ஸ்ரீ வேளாண் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறக்கட்டளை (SSIAST) லால்குடி வட்டார 20 விவசாயிகள் 5 நாட்கள் அழைத்து செல்லப்பட்டனர்,

அங்கு அவர்களுக்கு இயற்கை வேளாண்மை மற்றும் பல அடுக்கு வேளாண்மை முறைகள் முற்றிலும் ரசாயன உரங்கள் தவிர்த்து மண்ணில் உள்ள வளம் அதிகரிக்க செய்யும் பலவகை தானிய விதைப்பு முறைகள் பற்றியும் விவசாயிகள் தங்களுக்கு தேவையான இயற்கையான பொருட்களைக் கொண்டு தயார் செய்யும் பீஜாமிர்தம் கொண்டு விதை நேர்த்தி செய்தல் ஜீவா மிர்தம், கன ஜீவாமிர்தம் பயன்படுத்தி சாறு உறிஞ்சும் பூச்சிகள், தண்டு துளைப்பான், காய்த்துளைப்பான், பழ துளைப்பான் கட்டுப்படுத்திட தயார் செய்யும் முறைகள் செயல் விளக்கமாக விவசாயிகளைக் கொண்டு செய்து காண்பிக்கப்பட்டது.

உயிர் நொதி திரவம் மண்ணில் உள்ள நுண்ணூட்ட சத்துக்கள் உருவாக்கி இலைவழி தெளிப்பு செய்தல் புளித்த மோர் திரவம் தெளித்து பூஞ்சை நோய்களை கட்டுப்படுத்துதல் பிரம்மாஸ் திரம், அக்னி அஸ்திரம், நீம் அஸ்திரம்,மீன் அமினோ அமிலம் தேனீ வளர்ப்பு மேற்கண்ட வழிமுறைகளில் இடு பொருள்கள் பயன்படுத்தி இயற்கையான முறையில் வேளாண்மை செய்யும் முறைகள் குறித்து முனைவர் ராஜா மணி, வெங்கடேஷ் ஆகியோர் விவசாயிகளுக்கு விரிவாக விளக்கி கூறினார்.

மேலும் ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பு தொழிற்சாலை, திறன் மேம்பாடு மையம் ஆகிய இடங்களை அழைத்துச் சென்று விவசாயிகளுக்கு காண்பித்து விரிவாக விளக்கம் அளித்தனர். இறுதியில் இந்த கண்டுணர்வு சுற்றுலாவில் கலந்து கொண்ட விவசாயிகளின் அனுபவங்கள் நிறுவன தலைவர்கள் உடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது. மேலும் இந்த இயற்கை வேளாண்மை கண்டுணர்வு சுற்றுலா அழைத்து சென்ற வேளாண்மைத்துறை அட்மா திட்டம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சத்யபிரியா, தொழில்நுட்ப மேலாளர் சபரிச்செல்வன், உதவி தொழில் நுட்ப மேலாளர் கார்த்திக் லால்குடி வட்டார வேளாண்மை துறை அலுவலர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

# அங்கக வேளாண்மை விவசாயிகள் பயிற்சி



சேலம், செப்.7

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வேளாண்மை துறை அட்மா திட்டத்தில் அங்கக வேளாண்மை பற்றி மாவட்ட அளவிளான பயிற்சி 74- கிருஷ்ணாபுரத்தில் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் மோகன சரிதா தலைமையேற்று துறை சார்ந்த திட்டங்களை எடுத்து கூறினார், வட்டார தொழில்நுட்ப மேலாளர் அட்மா திட்டங்களை எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் நந்தகுமார் கலந்து கொண்டு மீன் அமிலம் தயாரிக்கும் முறைகளை செயல்விளக்கம் செய்து காட்டினார்.

சிறப்பு அழைப்பாளர், ஆத்தூர் கனிஷ்கா ஆர்கானிக்ஸ் பழனிவேல், மேலாளர் கலந்து கொண்டு பஞ்சாகாவியா மற்றும் அமிர்த கரைசல் மற்றும் இயற்கை கரைசல் தயாரிப்பு முறைகளும் அங்கக சான்றிதல் பெறும் முறைகள் பற்றி விரிவாக எடுத்து கூறினார்.

இதில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் சங்கர் நன்றி கூறினார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நானோ உர விழிப்புணர்வு முகாம்





தஞ்சாவூர், செப்.7

தஞ்சாவூர் மாவட்ட டெல்டா பகுதி விவசாயிகளின் நலனுக்காக கல்லணையில் தண்ணீர் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் ஹெச்.வினோத் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம்.ஷாஜஹான் ஆகியோர் கல்லணை மதகுகளைத் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வையொட்டி, வேளாண்மைத் துறை சார்பில் அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்கில் இப்கோ அதிகாரி மாரியப்பன் என்பவரால், இப்கோ நானோ உரங்கள் மற்றும் சாகரிகா காட்சிப்படுத்தப்பட்டன.

அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர், வேளாண்மைத் துறை அலுவலர்கள் மற்றும் 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் அரங்கிற்கு வருகை தந்து, நானோ யூரியா, நானோ டி.ஏ.பி., நானோ காப்பர், நானோ ஜிங்க் மற்றும் சாகரிகா ஆகியவற்றின் முக்கியத்துவம், நன்மைகள் மற்றும் பயன்பாட்டு முறைகள் பற்றி அறிந்து கொண்டனர்.



# நவீன வேளாண்மையில் பேரீச்சை சாகுபடி

### ஒரு ஏக்கரில் 100 செடிகள் நடவு

பேரீச்சை விவசாயம் செய்யறதுக்கு கரிசல் மண், செம்மண் ஏற்றது. ஆண் செடிகள் 10ம், பெண் செடிகள் 90ம் சேர்த்து ஒரு ஏக்கருக்கு 100 செடிகள் நட வேண்டும். வாரத்துக்கு ஒரு தண்ணீர் செடிகளுக்குப் பாய்ச்சினால் போதும். செடி நடும் போது 3 அடி அகலம் 3 அடி ஆழம் எடுத்து செடிய நடவு செய்–யனும். மூணு மாசத்துக்கு ஒரு முறை இயற்கை உரமோ கெமிக்கல் உரமோ போட்டு செடி வளர்ச்சிக்கு வெச்சிக்க வேண்டியது தான். இவ்வளவு தான் இதுல பாராமரிப்பு. வேறு எதுவும் தேவையில்லை. செடி வளரும் போது காண்டாமிருக வண்டு தென்னை மர வண்டுகிட்டயும் ஜாக்கிரதையா இருக்கனும். அது செடியில் உட்கார்ந்து செடிய நாசம் செஞ்சிடும். வண்டுகளும் பெரிசா வராது வர்ற மாதிரி இருந்தா மருந்து அடிக்கலாம்.

இதை தவிர்த்து பேரீச்சை மரத்தில் பெரிதாக நோய்த் தாக்குதல் கிடையாது. அதனால் பயப்படத் தேவையில்லை. மூன்று முதல் மாதிரி வளர்ந்து காப்பு ஆரம்பிக்கும் போது ஆண், பெண் செடி பூக்களை எடுத்து பெண் செடிகளில் கட்ட வேண்டும். மகரந்த சேர்க்கை நடந்தால் மட்டுமே பெண் செடிகளில் காய் உருவாகும். ஆண் செடிகளில் காய் வராது. பாலை பூ மட்டுமே வரும்.

மகரந்த சேர்க்கைகாக கவர் போட்டு காய் வரும் குலைகளை முழுதாக கட்டி விட வேண்டும். காய் பெரிதாகும்போது மழைத் தண்ணீர் பட்டு காய் அழுகிடும். அப்பவும் முன்னமே கட்டின கவர் பாதுகாப்பாக இருக்கும். பூ பூக்க ஆரம்பித்து மகரந்த சேர்க்கை நடந்து 45 நாள்களுக்குள் காய் கொடுக்கும்.

100 வரும் ஆக, ஆக பனைமரம் மாதிரி வளர்ந்து ஒரு மரம் ஒரு வருத்தில் அதிகபட்சமாக 200 கிலோ வரை காய் கொடுக்கும். 100 வரும் வேண்டுமனால் மரத்தை வைத்துக் கொள்ளலாம். ஒரு மரம் சராசரியாக 50 கிலோ கொடுத்தால் கூட மரமும் 5000 கிலோ கொடுக்கும்.

ரூ.50 என்று விலை பட்டியல் வைத்தால் கூட 2,50,000 வருமானம் மூணு மாசத்தில் கிடைத்துவிடும். 200 கிலோ மகசூல் வருகிறதென்றால் நீங்களே கணக்கு போட்டு கொள்ளுங்கள். வரும் பத்து லட்சம் என்ற வருமானத்தை மூணு மாசத்தில் எடுத்துவிடலாம். நிலம் அதிகம் இல்லை, ஆட்கள் பராமரிக்க இல்லை என்றெல்லாம் கவலைப்பட வேண்டாம். 10 பேரீச்சை மரங்களை நடுங்கள் அரசு கொடுக்கிற மாதிரி ஓய்வூதியம் மாதம் ரூ.30.000 அந்த மரம் கொடுக்கும், மூணு மாசத்திலே மாதத்துக்குப் பிரித்துக் கொடுக்கும். நான் 12 மாதத்துக்குப் பிரித்துக் கொடுக்கிறேன். வருத்துக்கு ஒரு தடைவ தான் காயஞ்சு போன கிளைகளை வெட்டுவோம்.

பேரீச்சைக் கன்றைப் பொறுத்தவரை இன்றைக்கு ரூ.5000 முதல் ரூ.6000 வரை போகிறது. பரி போன்ற பேரீச்சை வகைகள் ஆப்பிள் மாதிரி கலரில் பெரிதாக இருக்கும். இது எளிதாக கிடைக்காத மரம் ரகம்.

தொடர்புக்கு : நிஜாம்யூதீன் 94423 37717.

தகவல் : *யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.*

# கிராம மதிப்பீட்டின் மூலம் சமூக மற்றும் வேளாண் நிலைமைகளை அறியும் நடவடிக்கையில் வேளாண் கல்லூரி மாணவிகள்



ஈரோடு, செப்.7

ஈரோடு மாவட்டத்தில் கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டத்தின் கீழ், காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக மாணவிகள் லேகா ஸ்ரீ, நதியா, திரிதா, நி ஷா பார்ஜோ, ஆனந்தி மற்றும் கவி வர்ஷினி ஆகியோர் கிராம மதிப்பீட்டின் மூலம் கிராம மக்களின் சமூக மற்றும் வேளாண் நிலைமைகளை அறியும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் ஒரு பகுதியாக சமூக வரைபடம், வள வரைபடம், இயக்க வரைபடம், வென் வரைபடம், வட்டப்படம் உள்ளிட்ட மொத்தம் 11 பங்கேற்பு கிராம மதிப்பீட்டுக் கருவிகள் வரையப்பட்டு, அவற்றின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவம் குறித்து கிராம மக்களுக்கு மாணவிகள் விளக்கினர். இதன் மூலம் கிராமத்தின் இயற்கை வளங்கள், சமூக அமைப்பு, போக்குவரத்து, முக்கிய நிறுவனங்கள், வாழ்வாதார முறைகள் மற்றும் வேளாண் வளங்கள் குறித்த தகவல்களை கிராம மக்களின் பங்கேற்புடன் அறிந்து, வேளாண் விரிவாக்கப் பணிகளில் பங்கேற்பு அணுகுமுறையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.



# இயற்கை வேளாண்மை தொகுப்பு விவசாயிகளுக்கு மானியம்

பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் (PKVY) இயற்கை விவசாயத்தில் ஆர்வமுள்ள 250 விவசாயிகளுக்கு ஆட்மா திட்டத்தின் வாயிலாக இயற்கை வேளாண்மை குறித்து பயிற்சிகள் மற்றும் அறிமுக பயிற்சி அளிக்க படவுள்ளது.

**பயிற்சியில் என்ன சொல்லப்படுகிறது?**

இந்த பயிற்சியில் இயற்கை வேளாண்மை குறித்து விழிப் புணர்வு ஏற்படுத்திடவும் அவற்றின் நன்மைகள் மண்ணின் வளத்தை மேம்படுத்துதல்,மண்ணின் அங்கக கார்பன் அளவினை அதிகரித்தல், உயிர் உரங்கள் பயன்பாடு, பசுந்தாள் இயற்கை உரம் இடுவதன் நன்மைகள் பஞ்ச காவ்யா, பிஜாமிர்தம், ஜிவாமிர்தம் உள்ளிட்ட இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு குறித்து பயிற்சி வழங்க படவுள்ளது.

**இயற்கை வேளாண்மை தொகுப்பு?**
**(CLUSTER APPROACH)**

இயற்கை வேளாண்மை தொகுப்பில் உள்ள 250 விவசாயி களுக்கு, ஊக்குவிக்கும் விதமாக இயற்கை இடு பொருட்கள், தயாரிப்பு செலவுக்கான சிறப்பு ஊக்க தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு 4000 வீதம் 250 ஏக்கருக்கு தலா 5 லட்சம் நிதி ஒதுக்கீடு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**இந்த தொகை எப்படி (FINANCIAL ASSISTANCE) விவசாயி களுக்கு வழங்கப்படுகிறது?**

இந்த தொகை விவசாயிகளின் செலவின பட்டியல்களின் அடிப்படையில், இரு தவணைகளாக ஆதார் எண்ணுடன், இணைக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஒரு வங்கி கணக்கில் வரவு வைக்கபடும். இயற்கை விவசாயிகளால் விளைவிக்க பொருட் களுக்கு ‘இயற்கை விவசாய சான்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**இந்த திட்டத்தினால் உண்டாகும் நன்மைகள்?**

இத்திட்டத்தால் ஒவ்வொரு விவசாயியும் குறைந்த பட்சமாக அருகிலுள்ள 6 விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மையின் நடைமுறைகளை குறித்து பயிற்சி அளித்து இயற்கை வேளாண்மை செய்திட ஊக்குவிக்க வேண்டும். இதன் காரண மாக விவசாய உரங்களின் தேவையும் செலவும் கணிசமாக குறைகிறது. மண்வளமும் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப் படுவதுடன் நஞ்சில்லா உணவினை மக்களுக்கு வழங்கிட இயலும். எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் இயற்கை வேளாண்மையில் ஈடுபட வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# உயிர்ம வேளாண்மையில் உயிர்மச் சான்று பெறும் நடைமுறைகள்

இராமநாதபுரம், செப்.7

உயிர்ம வேளாண்மையில் செயற்கை இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை தவிர்த்து தனிமைப்படுத்தப்பட்ட பண்ணைகளிலிருந்து இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை மட்டுமே பயன்படுத்தி இயற்கை வழி மேலாண்மை முறையில் சாகுபடி செய்யும் முறையே உயிர்ம வேளாண்மை எனப்படுகிறது.


உயிர்ம வழி மேலாண்மை முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகள் தனி நபராகவோ அல்லது குழுவாகவோ பதிவு செய்து கொள்ளலாம். மேலும் உயிர்ம விளைபொருட்களை பதப்படுத்துவோர் வணிகம் மற்றும் ஏற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம். அங்ககச் சான்று பெற விவசாயிகள் அதற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், பண்ணையின் பொது விபர குறிப்பு, பண்ணையின் வரைபடம், ஆண்டு பயிர்த் திட்டம், மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை விபரம், துறையுடனான ஒப்பந்தம், நில ஆவணம், நிரந்தர கணக்கு எண், ஆதார் அட்டை நகல் மற்றும் விண்ணப்பதாரரின் கடவுச் சீட்டு அளவு புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் சான்று கட்டணத்தை செலுத்த வேண்டும். விவசாயம் மட்டுமின்றி கால்நடை வளர்ப்பு, தேனி வளர்ப்பு, வனப்பொருள் சேகரிப்பு செய்வோரும் வணிகம் மற்றும் ஏற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம்.

பதிவு கட்டணம், ஆய்வு சார்ந்த கட்டணம், பயண நேரம் கட்டணம் மற்றும் சான்று கட்டணமாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.2700/- பிற விவசாயிகள் ரூ.3200/- விவசாயிகள் குழுப் பதிவிற்கு ரூ.7200/- மற்றும் வணிக நிறுவனங்களுக்கு ரூ.9400/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அங்கக வேளாண்மையில் ஈடுபடும் தனிப்பட்ட விவசாயிகள் மற்றும் குழுக்கள் அமைத்து உரிய கட்டணம் செலுத்தி தேசிய அங்கக உற்பத்தி திட்டத்தின் கீழ் பதிவு செய்து சான்று பெற்று வருகின்றனர். மேலும் தற்பொழுது ஒரே வட்டாரத்தில் உள்ள ஒரே கிராமத்தில் அல்லது அருகாமையில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த அங்கக விவசாயம் செய்யும் விவசாயிகள் ஒரு குழுவாக அமைத்து எவ்வித கட்டணமும் இல்லாமல் பங்களிப்பு உறுதி அளிப்புத் திட்டத்தில் அங்ககச் சான்று பெறலாம். இவ்வாறு சான்று பெற்ற பொருட்களை உள்நாட்டு அளவில் மட்டும் விற்பனை செய்யலாம். குறைந்தபட்சம் 10 விவசாயிகள் முதல் 50 விவசாயிகள் வரை இணைந்து குழுவாக அமைத்து அங்கக முறைப்படி விவசாயம் செய்வோம் என உறுதி மொழி எடுத்துக் கொண்டு புகைப்படம் ஒட்டிய விண்ணப்பத்துடன் பதிவு செய்ய வேண்டும். பங்களிப்பு உறுதி அளிப்புத் திட்டத்தில் பதிவு செய்யும் விவசாயிகள் தேசிய அங்கக உற்பத்தி திட்டத்தின் கீழ் உயிர்மச் சான்று பெறுவதற்காக வழங்கப்பட்ட அதே ஆவணங் களை மண்டல குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தில் உறுப்பினர்கள் குழுவில் உள்ள மற்ற விவசாயி களின் வயலை ஆய்வு செய்ய வேண்டும். மூன்றாம் நபர் ஆய்வு இல்லை. இத்திட்டத்தில் கட்டணமின்றி எளிமையான முறையில் பதிவு செய்வதால் விவசாயிகளுக்கு பயனுள்ளதாகவும், அதிகளவில் விவசாயிகள் அங்ககச் சான்று பெற முடியும். எனவே உயிர்மச் வேளாண்மை செய்யும் விவசாயிகள் குழுவாக இணைந்து பங்களிப்பு உறுதி அளிப்புத் திட்டத்தில் கட்டணம் இல்லாமல் அல்லதுமத்திய அரசின் தேசிய அங்கக வேளாண்மைசெயல் திட்டத்தின்படி கட்டணம் செலுத்தியும் பதிவு செய்து உயிர்மச் சான்று பெற்று பயன் பெறலாம்.

எனவே இயற்கை முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகள், இயற்கை வேளாண்மையில் உயிர்ம சான்று பெறும் நடை முறைகள் குறித்து உழவர் மையம், ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகம் (தலைமை அரசு மருத்துவமனை எதிரில்) இராமநாதபுரம் என்ற முகவரியில் செயல்பட்டு வரும் மாவட்ட விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பதிவு செய்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மின்னணு பயிர் கணக்கெடுப்பு பணி விவசாயிகளுக்கு அழைப்பு

புதுக்கோட்டை, செப்.7

புதுக்கோட்டை வட்டாரத்தில் நடைபெற்று வரும் மின்னணு பயிர் கணக்கெடுப்பு பணியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ள விவசாயிகள் மற்றும் தன்னார்வலர்களுக்கு வேளாண்மை உதவி இயக்குனர் அன்பரசன் அழைப்பு விடுத்துள்ளார்.




இது குறித்து அவர் வெளியிட்ட செய்தி குறிப்பில், பயிர் சாகுபடி விவரங்களை துல்லியமாக பதிவு செய்து அனைத்து அரசு திட்டங்களும், விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடையும் நோக்கில் மின்னணு பயிர் கணக்கெடுப்பு முறை செயல் படுத்தப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை வட்டாரத்தில் உள்ள 42 கிராமங்களில், நடப்பு காரிப் பருவத்தில் மின்னணு பயிர் கணக்கெடுப்பு பணி நடந்து வருகிறது. இதில் பணியாற்ற ஸ்மார்ட் போன் பயன்படுத்த தெரிந்த ஆர்வமுள்ள விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம். பயிர் சாகுபடி கணக்கெடுப்பு செய்யும் விவசாயிகளுக்கும் மற்றும் தன்னார்வலர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்கப்பட உள்ளது. அதாவது தரிசு நிலத்தை பதிவு செய்ய ரூ.3ம், பயிர் சாகுபடி செய்யப்பட்டதை பதிவு செய்ய ரூ.5ம், ஒரே உட்பிரிவில் ஊடுபயிர் சாகுபடி இருந்தால் கூடுதலாக உட்பிரிவு ஒன்றுக்கு ரூபாய்.2 வீதம் அதிகபட்சபாக ரூ.9ம் ஊக்கத்தொகையாக வழங்கப்பட இருக்கிறது. இந்த ஊக்கத்தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அன்பரசன் தெரிவித்துள்ளார்.

# மாற்றி மாற்றி ஈரப்படுத்தி உலர்த்தும் பாசன முறை [AWD]



திருச்சி, செப்.7

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், செம்பரை கிராமத்தில் காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியைச் சேர்ந்த மாணவிகள், ஊரக வேளாண் மைப் பணி அனுபவத் திட்டம் மற்றும் கிராமத் தங்கல் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குமாற்றி மாற்றி ஈரப்படுத்தி உலர்த்தும் பாசன முறை மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியில் மாணவிகள் மௌனிகா, அருந்ததி, ஹஸ்வத்தா பத்மராஜ், கவிதாஞ்சலி, ஹர்ஷினி, மற்றும் ஹரிணி ஆகியோர் கலந்து கொண்டு மாற்றி மாற்றி ஈரப்படுத்தி உலர்த்தும் பாசனமுறை முக்கியத்துவம் மற்றும் பயன்கள் குறித்து விவசாயி களுக்கு விளக்கினர்.

நெல் சாகுபடியில் நீரை தொடர்ந்து வயலில் தேக்கி வைப்பதற்குப் பதிலாக, மாற்று ஈரப்பதன உலர்த்தல் பாசன முறையை (Alternate Wetting and Drying – AWD) பின்பற்றுவதன் மூலம் நீரை சிக்கன மாகப் பயன்படுத்தலாம். இம்முறையில் வயலில் உள்ள நீர் நிலையை கண்காணித்து, தேவையான நேரத்தில் மட்டும் பாசனம் செய்யப்படுகிறது.

இதற்காக வயல் நீர்மட்டக் குழாய் பயன்படுத்தப்படுகிறது. நீர்மட்டம் மண்ணின் மேற்பரப்பிலிருந்து குறிப்பிட்ட அளவு கீழே சென்றதும் மீண்டும் பாசனம் அளிக்கப்படுகிறது. இதனால் வயலில் தேவை யில்லாமல் நீர் தேங்கி நிற்பது தவிர்க்கப்பட்டு, பாசன நீரின் பயன் பாடு குறைகிறது. இந்த முறையின் மூலம் நீரைச் சேமிப்பதுடன், நீர் பயன்பாட்டுத் திறனையும் மேம்படுத்த முடியும். மேலும், நெற் பயிருக்கு தேவையான ஈரப்பதம் தொடர்ந்து கிடைக்கச் செய்வதால், நீரை திறமையாகப் பயன்படுத்தும் நிலையான சாகுபடி முறையாக புநிம் பயன்படுகிறது.

விவசாயிகளுக்கு எங்களின் கருத்து : வயலில் எப்போதும் தண்ணீர் தேங்கி இருக்க வேண்டிய அவசியமில்லை. பயிரின் தேவையை அறிந்து, சரியான நேரத்தில் மட்டும் பாசனம் அளிப்பதன் மூலம் நீரைச் சேமித்து, சிறந்த நீர் மேலாண்மையை மேற்கொள்ளலாம்.

# இயற்கை வேளாண்மை பயிற்சிக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அழைத்துச் செல்லப்பட்ட விவசாயிகள்




திருச்சி, செப்.7

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரம்பூர் வட்டாரத்தில் வேளாண் துறையின் மூலம் செயல்படும் அட்மா திட்டத்தில் இயற்கை வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் கோயம்புத்தூருக்கு மூன்று நாள் பயிற்சிக்கு 30 விவசாயிகளை அழைத்துச் செல்லப்பட்டனர்.

இப்பயணத்தினை வேளாண்மை உதவ இயக்குனர் சுகன்யா தேவி தொடங்கி வைத்தார். இப்பயிற்சியில் முதல் நாள் வகுப்பில் நம்மாழ்வார் இயற்கைப் பண்ணையம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் மண்ணியல் துறை பேராசிரியர் ஜானகி கலந்து கொண்டு இயற்கை வேளாண்மையில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை பற்றியும், டாக்டர் சிவகுமார் உழவியல் துறை பேராசிரியர் மண்வள மேலாண்மை மற்றும் நுண்ணுயிரிகளை பெருக்கும் முறைகள், பயிர் சுழற்சி முறைகள் பற்றியும் எடுத்துக் கூறினார். மதிய வகுப்பில் விரிவாக்க கல்வி இயக்ககம் பேராசிரியர் டாக்டர் கதிரவன் மண்ணின் வளத்தை மேம்படுத்துவதற்கு இயற்கை கரிம உரங்களை பயன்படுத்துவது குறித்து விளக்கினார்.

இரண்டாம் நாள் வகுப்பில் நம்மாழ்வார் இயற்கை பண்ணையம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் பூச்சியியல் துறை பேராசிரியர் சுகந்தி கலந்து கொண்டு ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையில் இயற்பியல் மற்றும் இயந்திர நடைமுறைகள், உயிரியல் முறைகள் மற்றும் இயற்கை தாவர சாறுகள் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். தோட்டக்கலைத்துறை இணை பேராசிரியர் ஹரிப்பிரியா இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பில் மண்புழு தயாரிப்பு, பஞ்சகாவியா, மீன் அமிலம், ஐந்திலை கரைசல், மூன்று இலை கரைசல் போன்ற இயற்கை இடு பொருட்களின் முக்கியத்துவத்தையும் பயன்

பாட்டையும் பற்றியும் அங்கக சான்றிப்பு நடைமுறைகள் பற்றியும் விரிவாக விளக்கிக் கூறினார்.

மூன்றாம் நாள் வகுப்பில் வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறையை சேர்ந்த பேராசிரியர் பாலாஜி மின்னணு தேசிய வேளாண் சந்தைப்படுத்தல் மற்றும் பண்ணை வாயில் சந்தைப்படுத்துதல் நடைமுறைகள் பற்றி விரிவாக விவசாயிகளுககு எடுத்துக் கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுபாதேவி மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாளர் பாபு செய்திருந்தனர்.



# பொன்னமராவதி வட்டாரத்தில் விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பதிவு செய்வதற்கு சிறப்பு முகாம் : வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, செப்.7

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி வட்டாரத்தில் 12960 நில உரிமைதாரர் விவசாயிகள் இருந்து வரும் நிலையில் 9385 விவசாயிகள் மட்டுமே நில உடைமை அடையாள எண் பதிவு மேற்கொண்டுள்ளனர். தற்போது பாரத பிரதமரின் விவசாயிகளின் கவுரவநிதி உதவி திட்டத்தின் கீழ் தவனை தொகையினை தொடர்ந்து பெறுவதற்கும் பயிர் காப்பீடு செய்யவும் இரசாயண உரங்கள் வாங்குவதற்கும் மற்றும் மத்திய மாநில அரசின் பிற மானியத் திட்டங்களில் பயன்பெறுவதற்கும் விவசாயிகள் தங்களது நில உடமைகளை பதிவு செய்துகொள்வது அவசியமாக்கப்பட்டுள்ளது. இந்த நில உடைமை செய்யும் பணியை விரைவுபடுத்தும் நோக்கத்தில் அனைத்து பொது சேவை மையங்கள் மூலமாகவும் நிலவுடமை பதிவு செயல்படுத்தப்படுகிறது. பதிவு பணியின் போது நில உரிமைதாரரின் பெயர் இன்னைறய நிலைக்கு சரியாக மாற்றம் செய்யப்படாமல் இருப்பதும் ஆதார் எண்ணுடன் மொபைல் எண் இணைக்கப்பட்ட கைபேசி தற்போது பயன்பாட்டில் இல்லை என்பதும் கண்டறியப்பட்டால் அதன் சம்மந்தப்பட்ட விவசாயி சரி செய்த பிறகு பதிவேற்றம் செய்யப்படும்.

எனவே மீதமுள்ள 3575 விவசாயிகளும் இத்திட்டத்தில் பொன்னமராவதி வட்டாரத்தில் அனைத்து வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களிலும் வருகின்ற செப்டம்பர் 08 – காரையூர் பிர்கா, செப்டம்பர் 09 – அரசமலை பிர்கா, செப்டம்பர் 10 – பொன்னமராவதி பிர்காவில் நடைபெறவிருக்கும் சிறப்பு முகாம்களில் பயன் பெறலாம் நடைபெற உள்ளது. இம்முகாம்களில் வேளாண்மைத் துறை அலுவலர்கள் தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் அலுவலர்கள் கலந்து தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பாக விவசாயிகளின் நிலஉடமைகள் சரிபார்க்கப்பட்டு அடையாள எண் வழங்கும் பணிநடைபெற உள்ளது. எனவே இதுவரை விவசாய அடையாள எண் பெறாத விடுபட்ட விவசாயிகள் அனைவரும் இம்முகாமில் கலந்து கொண்டு உடனடியாக நிலவுடைமை பதிவு மேற்கொள்ளலாம் என பொன்னமராவதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ரஹ்மத் நி ஷா பேகம் தெரிவித்துள்ளார்.

# மகளிருக்கு ஏற்ற உணவு மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்பப் பயிற்சி



மதுரை, செப்.7

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் அரும்பனூர் புதூரில் 7 நாட்கள் நடைபெற்ற நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாமின் ஒரு பகுதியாக, மகளிருக்கு ஏற்ற உணவு மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்பப் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை உதவிப் பேராசிரியர் முனைவர் தமிழ்செல்வி கலந்து கொண்டு தொழில்நுட்ப உரை வழங்கினார். உணவுப் பொருட்களை மதிப்புக்கூட்டி தயாரிக்கும் தொழில்நுட்பங்கள் குறித்து பெண்களுக்கு விரிவாக பயிற்சி அளித்தார்.

அவர் பேசுகையில், விவசாயத்தில் விளையும் காய்கறிகள், பழங்கள், சிறுதானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் பிற வேளாண் விளைபொருட்களை நேரடியாக விற்பனை செய்வதைவிட, அவற்றை உரிய முறையில் பதப்படுத்தி மதிப்புக்கூட்டி விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் வருமானம் பெற முடியும் என்று விளக்கினார்.

மேலும், சிறுதானிய உணவுப் பொருட்கள், மாவு வகைகள், ஊறுகாய், வற்றல், பழச்சாறு, ஜாம், சத்துமாவு உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருட்களை தயாரித்து மதிப்புக்கூட்டுதல், உணவுப் பொருட்களை சுகாதாரமான முறையில் பதப்படுத்தி சேமித்தல், தரத்தைப் பாதுகாத்தல், சரியான பேக்கிங் மற்றும் லேபிளிங் செய்தல் ஆகியவை குறித்தும் பயிற்சி வழங்கப்பட்டது.

குறிப்பாக கிராமப்புற பெண்கள் குறைந்த முதலீட்டில் வீட்டிலிருந்தே சிறு தொழில் தொடங்கி, குடும்ப வருமானத்தை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மைக் கல்லூரி மற்றும் சமுதாய அறிவியல் கல்லூரிகளின் 2024-ம் ஆண்டு நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் சித்ரா, முனைவர் ஆரோக்கிய மேரி, முனைவர் வேணுதேவன் ஆகியோர் செய்திருந்தனர்.

# விவசாயிகள் அடையாள எண் பதிவு செய்ய, பட்டா மாறுதல் சிறப்பு முகாம் : வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, செப்.7

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் விவசாய பயனாளி தரவுகளை அரசின் திட்டங்களுடன் ஒருங்கிணைப் பதுடன், பயிர் சாகுபடி விவரங்கள் மற்றும் அரசு வழங்கும் மானி யங்கள், உதவித் தொகைகள் போன்ற அனைத்து தகவல்களையும் பதிவு செய்யும் வகையில், அனைத்து விவசாயிகளுக்கும் விவசாயி அடையாள எண் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் விவசாயம் சார்ந்தமானியங்கள், உரம் வாங்குதல், பயிர் காப்பீடு, பயிர் சேத நிவாரணம் மற்றும் விவசாய கௌரவ நிதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கும் இந்த அடையாள எண் அவசியமாகும்.

விவசாய அடையாள எண் பதிவு பணியானது தற்சமயம் நேரடி பட்டாதாரர்களுக்கு மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே வாரிசுரிமை அடிப்படையில் நிலத்தினை விவசாயம் செய்யும் விவசாயிகள், வாரிசுரிமை அடிப்படையில் பட்டா மாறுதல் மேற்கொண்டு விவசாய அடையாள எண் பதிவு மேற்கொள்ளும் பொருட்டு வேளாண்மைத் துறை மற்றும் வருவாய் துறை இணைந்து பின்வருமாறு சிறப்பு பட்டா மாறுதல் முகாம் நடத்தப்பட உள்ளது. 09.09.26 அன்று புதுநகர் வருவாய் சரகத்திற்கு உட்பட்ட கிராமங்களுக்கு பெரியகோட்டை கிராம நிர்வாக அலுவலகத்திலும், 10.09.26 அன்று கந்தர்வகோட்டை வருவாய் சரகத்திற்க்கு உட்பட்ட கிராமங்களுக்கு கோமாபுரம் கிராம நிர்வாக அலுவலகத்திலும் மற்றும் 11.09.26 அன்று கல்லாக்கோட்டை வருவாய் சரகத்திற்க்கு உட்பட்ட கிராமங்களுக்கு கல்லாக்கோட்டைகிராம நிர்வாக அலுவல கத்திலும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

எனவே, மேற்கண்டவாறு நடைபெறும் சிறப்பு முகாமில் விவசாயிகள் கலந்து கொண்டு பட்டா மாறுதல் மேற்கொள்ள வேண்டிய விவசாயிகள் உரிய ஆவணங்களை சமர்பித்து பட்டா மாறுதல் மேற்கொண்டு விவசாய அடையாள எண் பதிவு செய் திடவும், இதுவரை விவசாய அடையாள எண் பதிவு மேற்கொள்ளாத விவசாயிகள் விவசாய அடையாள எண் பதிவு செய்து பயனடையுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் (பொ.) ரா.விக்னேஷ் அழைப்பு விடுத்துள்ளார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வேளாண் கல்லூரி மாணவர்கள் சார்பாக பொது மருத்துவ முகாம்




தஞ்சாவூர், செப்.7

தஞ்சாவூர் மாவட்டம், இராக்கதம்பட்டி கிராமத்தில் 01.09.26 முதல் 07.09.26 வரை நடைபெற்று வரும் NSS சிறப்பு முகாமின் ஒரு பகுதியாக, 03.09.26 அன்று பொது மருத்துவ முகாம் RVS வேளாண் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் இணைந்து நடத்தினர்.

கிராம மக்களிடையே அடிப்படை சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், நோய்களைத் தடுக்கும் சுகாதார நடைமுறைகளை ஊக்குவித்தல்மற்றும் ஆரம்ப நிலை மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் ஆகிய நோக்கங்களுடன் பொது மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் அடங்கிய மருத்துவக் குழுவினரின் ஆதரவு மற்றும் வழிகாட்டுதலுடன் இம்மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமில் பொதுவான உடல் நலப்பரிசோதனைகள் மற்றும் ஆய்வகப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுவாக ஏற்படக்கூடிய உடல் நலப்பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறி வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற NSS தன்னார்வலர்கள் முக்கியப் பங்காற்றினர். மேலும், தடுப்பு சுகாதாரம் மற்றும் வழக்கமான உடல் நலக் கண்காணிப்பின் முக்கியத்துவம் குறித்து கிராம மக்களிடையே விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர்.

**முடிவுரை**

03.09.26 அன்று ராக்கடன்பட்டி கிராமத்தில் நடைபெற்ற பொது மருத்துவ முகாம், NSS சிறப்பு முகாமின் நாள் 3 நடவடிக்கைகளில் ஒரு முக்கிய நிகழ்வாக வெற்றிகரமாக நிறைவு பெற்றது. இம் முகாமின் மூலம் கிராம மக்களுக்கு அடிப்படை உடல் நலப் பரிசோதனை வசதிகளும் சுகாதார விழிப்புணர்வும் வழங்கப்பட்டன. மேலும், NSS தன்னார்வலர்கள் சமூகசேவை மற்றும் கிராமப்புற சுகாதாரப் பணிகளில் நேரடி அனுபவத்தைப் பெற்றனர்.

# அதிக வெப்பநிலையிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கும் நவீன பசுமைக்குடில் தொழில்நுட்பங்கள்

## அறிமுகம்

காலநிலை மாற்றம் மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக பயிர் உற்பத்தியில் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக கோடை காலங்களில் அதிக வெப்பநிலை, குறைந்த ஈரப்பதம் மற்றும் நீர்ப்பற்றாக்குறை ஆகியவை பயிர் களின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. அதிக வெப்பம் காரணமாக இலைகள் வாடுதல், பூக்கள் உதிர்தல், மகரந்தச் சேர்க்கை குறைதல் மற்றும் மகசூல் குறைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் பயிர்களுக்கு ஏற்ற வெப்பநிலை, ஈரப்பதம் மற்றும் ஒளி அளவை கட்டுப்படுத்தி வழங்குவதற்கு பசுமைக்குடில் தொழில்நுட்பம் சிறந்த வழியாக உள்ளது. நவீன பசுமைக்குடில் களில் காற்றோட்டம், நிழல், நீர்த்துளி குளிரூட்டல் மற்றும் தானியங்கி கண்காணிப்பு போன்ற தொழில்நுட்பங்கள் பயன் படுத்தப்படுகின்றன.

## அதிக வெப்பநிலையால் ஏற்படும் பாதிப்புகள்

அதிக வெப்பநிலை பயிர்களின் உடலியல் செயல்பாடுகளை நேரடி யாகப் பாதிக்கிறது. வெப்பநிலை அதிகரிக்கும்போது தாவரங்களில் நீராவிப்போக்கு அதிகரித்து, மண்ணில் உள்ள நீர் விரைவாகக் குறைகிறது. இதனால் தாவரங்கள் வாடத் தொடங்குகின்றன. தக்காளி, குடைமிளகாய், வெள்ளரி போன்ற காய்கறிப் பயிர்களில் அதிக வெப்பநிலை காரணமாக பூக்கள் உதிர்வது மற்றும் காய்கள் உருவாகுதல் குறைவது போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். மேலும், அதிக வெப்பம் மகரந்தத் துகள்களின் செயல்திறனை குறைத்து மகரந்தச் சேர்க்கையையும் பாதிக்கக்கூடும்.

## பசுமைக்குடிலின் முக்கியத்துவம்

பசுமைக்குடில் என்பது பயிர்களைச் சுற்றி ஒரு கட்டுப்படுத்தப்பட்ட சூழலை உருவாக்கும் அமைப்பாகும். இதன் மூலம் வெளிப்புற சூழலில் ஏற்படும் அதிக வெப்பம், அதிக மழை, காற்று மற்றும் பூச்சித் தாக்கம் போன்றவற்றிலிருந்து பயிர்களை ஓரளவு பாதுகாக்க முடியும். பசுமைக்குடிலில் பயன்படுத்தப்படும் மூடுபொருள், நிழல் வலை, காற்றோட்ட அமைப்பு மற்றும் குளிரூட்டும் கருவிகள் மூலம் பயிர்களுக்கு ஏற்ற சூழலை உருவாக்க முடியும். இதனால் ஆண்டு முழுவதும் தரமான காய்கறிகள், மலர்கள் மற்றும் நாற்றுகளை உற்பத்தி செய்ய முடியும்.


## நவீன குளிரூட்டும் தொழில்நுட்பங்கள்

### 1. நிழல் வலை



அதிக சூரிய ஒளி நேரடியாக பயிர்களைத் தாக்குவதைத் தடுப்பதற்கு நிழல் வலை பயன்படுத்தப்படுகிறது. இது பசுமைக் குடிலுக்குள் நுழையும் சூரிய கதிர்வீச்சை குறைத்து வெப்ப நிலையைக் கட்டுப்படுத்த உதவுகிறது. பயிரின் தேவைக்கேற்ப பொருத்தமான நிழல் அளவு கொண்ட வலை தேர்வு செய்ய வேண்டும்.

### 2. காற்றோட்ட அமைப்பு



பசுமைக்குடிலுக்குள் தேங்கும் சூடான காற்றை வெளியேற்றுவதற்கு இயற்கை அல்லது செயற்கை காற்றோட்ட அமைப்பு பயன்படுத்தப் படுகிறது. வெளியேற்ற விசிறி மற்றும் சுழற்சி விசிறி போன்ற கருவிகள் காற்றின் இயக்கத்தை அதிகரித்து வெப்பநிலையை குறைக்க உதவுகின்றன.

### 3. விசிறி மற்றும் பேட் குளிரூட்டும் அமைப்பு

இது நவீன பசுமைக்குடில்களில் பயன்படுத்தப்படும் முக்கியமான குளிரூட்டும் முறையாகும். ஈரமான குளிர்விக்கும் பாய் வழியாக வெளிக்காற்று பசுமைக்குடிலுக்குள் இழுக்கப்படுகிறது. காற்று ஈரமான பாய் வழியாகச் செல்லும்போது அதன் வெப்பநிலை குறைகிறது. பின்னர் குளிர்ந்த காற்று பயிர்கள் இருக்கும் பகுதியில் பரவுகிறது.



### 4. ஃபோகிங் மற்றும் மிஸ்டிங் (Fogging மற்றும் Misting)

நுண்ணிய நீர்த்துளிகளை காற்றில் தெளிப்பதன் மூலம் பசுமைக் குடிலின் வெப்பநிலையைக் குறைக்கும் முறையே ஃபோகிங் (fogging) ஆகும். மிஸ்டிங் (Misting) முறையிலும் சிறிய நீர்த்துளிகள் பயன்படுத்தப்படுகின்றன. நீர்த்துளிகள் ஆவியாகும்போது சுற்றுப் புறத்திலிருந்து வெப்பத்தை எடுத்துக்கொள்வதால் குளிர்ச்சி ஏற்படுகிறது.

## தானியங்கி கண்காணிப்பு தொழில்நுட்பம்

நவீன பசுமைக்குடில்களில் வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தை



கண்காணிக்க சென்சார்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த சென் சார்கள் மூலம் பசுமைக் குடிலின் உள்ளக சூழலை தொடர்ந்து கண் காணிக்க முடியும். வெப்பநிலை குறிப்பிட்ட அளவைத் தாண்டும் போது தானாகவே விசிறி அல்லது குளிரூட்டும் அமைப்பு செயல் படும் வகையில் தானியங்கி கட்டுப்பாட்டு அமைப்புகளைப் பயன்படுத்தலாம். இதனால் மனித உழைப்பு குறைவதுடன் நீர் மற்றும் மின்சாரத்தையும் திறமையாகப் பயன்படுத்த முடியும்.

## நன்மைகள்

நவீன பசுமைக்குடில் தொழில்நுட்பங்கள் மூலம் அதிக வெப்பநிலையின் பாதிப்பைக் குறைக்க முடியும். பயிர்களுக்கு ஏற்ற வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தை பராமரிக்க முடிவதால் பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூல் மேம்படுகிறது. நீர் மற்றும் உரங்களை திறமையாகப் பயன்படுத்த முடியும். மேலும், தரமான காய்கறிகள் மற்றும் மலர்களை கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் உற்பத்தி செய்ய முடியும்.

## தமிழ்நாட்டில் பயன்பாடு

தமிழ்நாட்டில் கோடை காலங்களில் பல பகுதிகளில் அதிக வெப்பநிலை நிலவுகிறது. குறிப்பாக காய்கறி மற்றும் மலர் சாகுபடியில் வெப்ப அழுத்தம் ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. இத்தகைய பகுதிகளில் குறைந்த செலவிலான விஜுழி ள–ஜளமி ஜுலிற்விள முதல் நவீன கட்டுப்படுத்தப்பட்ட பசுமைக்குடில் வரை விவசாயிகளின் தேவைக்கேற்ப பயன்படுத்தலாம். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு குறைந்த செலவு நிழல்வலை அமைப்புகள் பயனுள்ளதாக இருக்கலாம். அதிக மதிப்புள்ள காய்கறிகள் மற்றும் மலர்களை வணிக ரீதியாக உற்பத்தி செய்யும் விவசாயிகள் தானியங்கி குளிரூட்டல் மற்றும் சென்சார் தொழில்நுட்பங்களைக் கொண்ட பசுமைக்குடில்களைப் பயன்படுத்தலாம்.

## முடிவுரை

காலநிலை மாற்றம் மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலையை எதிர்கொள்ள நவீன பசுமைக்குடில் தொழில்நுட்பங்கள் முக்கியமான வேளாண் பொறியியல் தீர்வாக உள்ளன.

எனவே, தமிழ்நாட்டில் எதிர்காலத்தில் காலநிலைக்கு ஏற்ற கட்டுப் படுத்தப்பட்ட விவசாயம் என்ற அணுகுமுறையில் பசுமைக்குடில் தொழில்நுட்பங்கள் முக்கியப் பங்கு வகிக்கும். சரியான தொழில் நுட்பத்தை பயிர் மற்றும் உள்ளூர் காலநிலைக்கு ஏற்ப தேர்வு செய்வது அதிக மகசூலுக்கும், நீர் சேமிப்புக்கும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதற்கும் உதவும்.



கட்டுரை ஆசிரியர் : ***Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com.***

